மலர் 2 இதழ் 1 ஜூலை, 2017 ISSN : 2454-3993

# ஐங்குறுநூற்றில் பெண்சார் இயங்கியல்

ச.பிரேமலதா
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
பாரதியார் பல்கலைக் கழகம்
கோவை

பண்டைய இலக்கியங்கள் தமிழரின் வாழ்வியலைத் தெளிவாகக் வெளிப்படுத்தும் ஊடகங்களாகத் திகழ்கின்றன. இலக்கியங்கள் தனிமனித வாழ்வையும் சமூக வாழ்வையும் பல்வேறு படிநிலைகளில் பதிவு செய்கின்றன. இஃது ஒரு தொடர் சங்கிலியைப் போல இயங்குகிறது. இவ்வியக்கம் காலத்திற்கு ஏற்றாற்போல பல்வேறு சடங்குகளை ஏற்றும். சமூக இயக்கத்திற்கு உட்பட்டும் நகர்ந்து சென்றுள்ளது. ஐங்குறுநூற்றில் பெண் பாத்திரங்கள் எவ்வாறு இயங்கி தங்களது பதிவினைச் செய்துள்ளன என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பெண் சார் இயங்கியல்**

சங்க இலக்கியத்தில் பெண் சார்புடைய பாடல்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. அன்றைய காலச்சூழலை, வாழ்வியல் நிலையை தெளிவாகப் பதிவு செய்துள்ளன. பெண்சார் இயக்கம் தனிமனித இயங்கியலையும், சமூக இயங்கியலையும், நடத்தைசார் இயங்கியலையும் தெளிவுறுத்துகின்றன. பெண்ணியக்கமாகத் தோழி, தலைவி, செவிழி, நற்றாய், பரத்தை, காமக்கிழத்தி, போன்றோரின் இயக்கங்கள் சுட்டப்படுகின்றன. பாடலின் இயக்கத்தில் இவர்களின் பங்குகூற விளையும் கருத்துக்கள் முக்கிய இடம் பெறுகின்றன.

**தோழி கையுறை**

தலைவியின் உற்ற துணையாகத் தோழி திகழ்கின்றாள். தலைவியின் இன்பதுன்பங்களில் முக்கியப் பங்காற்றுபவளாக விளங்குகிறாள்.

“நெய்யோடு மயக்கிய...
வயலை அம்சிலம்பின் தலையது
செயலை அம் பகைத்தழை வாடும் – அன்னாய்” (ஐங் . 211)

தலைவன் கொடுத்தனுப்பிய கையுறையைத் தலைவி ஏற்றருள வேண்டும் என்பதே தோழியின் வேண்டுகோளாக அமைகிறது. தலைவன் கொடுத்த கையுறையைத் தலைவி வாடுமுன் அணிந்து கொள்ள வேண்டும் இல்லையெனில் தலைவன்

வருந்துவான் என்பது குறிப்பாகும். அக்கையுறை மதிப்பிற்குரியது என்றும் புறக்கணிக்கலாகாது என்பதும் தோழியின் கருத்தாக இயங்குகிறது. தலைவன், தலைவியின் காதலுக்குப் பாலமாக தோழி செயல்படுகிறாள். தோழி இருவரது அன்பினை ஆழப்படுத்துபவளாக விளங்குகிறாள்.

**வரைவு நீட்டிப்பு**

தலைவன் தலைவியை மணந்து கொள்ளாது பகற்குறியில் வந்தொழுகும்போது இதனால் தலைவியின் நலன் பாதிக்கப்படுகிறது.

"கிளம்பிறை அன்ன கோட்ட கேழல்

.....................................................

அயம் திகழ் கிலம்ப கண்ழகும்

பயந்தன மாதோ' நீ நயந்தோள் கண்ணே!" (ஐங் 264)

தோழி, தலைவனை விரைவாக வரைவிற்கு முடுக்குவதாய் இயங்குகிறாள். இருவரது காதலை வலுப்படுத்தும் நிலையிலும் சமூகத்தில் இருவரின் மதிப்பும் கெடாமல் காக்கும் பொறுப்பும் தோழியுடையதாகின்றது.

**நொதுமலர்**

சமூகத்தில் பெண் என்றால் ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் மட்டும் பெற்றோரின் இல்லத்தில் வாழும் மரபு இன்றளவும் பின்பற்றப்பட்டு வருகிறது. தலைவியின் காதல் தெரியாது அயலார் மணம் பேசி வருதல் இயற்கையாகும்.

"நனி நாண் உடையை மன்ற

பனிப் பயந்தன, நீ நயந்ததோள் கண்ணே" (ஐங்.266)

இத்தகைய சமூக இயக்கத்தில் தலைவியின் நிலையைத் தலைவனிடம் தெரிவித்து அவனை 'நாணிலி' என்று இடித்துரைத்துத் திருமணத்திற்கு வற்புறுத்தும் நிலையில், தோழி தன் பணியைச் சிறப்புறச் செய்கின்றாள். இப்பாடலில் 'சிறுகட்பன்றிப் பெருஞ்சின ஒருத்தல்' என்பது முரண்தொடைச் செய்தியாகும். தலைமக்களின் சமூக செயல்பாட்டில் முக்கிய இடம் பெறுகிறாள் தோழி.

**கற்புக்கடன் காத்தல்**

தலைவியின் காதல் அறியாது தலைவியை அயலார் பெண் கேட்டு வரும்போது, தோழி தலைவியின் கற்பைக் காத்தற்பொருட்டு, அறத்தோடு நிற்கும் நிலை தோழியின் கடமையாகிறது. இதனைப் பின்வரும் பாடல் பதிவு செய்கின்றது.

"அன்னை, வாழி வேண்டு அன்னை' – புன்னை

பொன் நிறம் விரியும் பூக்கெழு துறைவனை

'என்னை' என்றும், யாமே, இவ்வூர்

பிறிது ஒன்றாகக் கூறும்

ஆங்கும் ஆக்குமோ, வாழிய, பாலோ" (ஐங்.110)

நொது மலர் வரைவின் தோழி அறத்தோடு நிற்கும்போது ஊழி காரணமாகத் தலைவனும் தலைவியும் ஒன்றுபட்டனர். ஆனால் ஊரார் இதனை வேறுவகையாகக் கூறுகின்றனர். ஊராரால் அவர்களைப் பிரிக்க இயலுமோ? என்றும், அவ்வாறு பிரித்தால் ஊழாகாதே எனத் தெளிவாகத் தலைவன் தலைவிக்கான காதலை விளக்குவதாகத் தோழியின் இயக்கம் அமைந்துள்ளது. 'ஆக்குமோ' பால்வரை தெய்வம் இதற்கு உடன்படுமோ? என்ற ஐயப்பாட்டுச் சிந்தனை, பாடலை வலுப்படுத்தியுள்ளது. சமூகத்தால் பின்னப்பட்ட வாழ்க்கையில் தனிமனித இயக்கம் இன்றியமையாததாகின்றது. தலைவியின் கற்பொழுக்கத்தைப் பேணுவதில் தோழியின் இயக்கம் முக்கியத்துவம் பெறுகிறது.

**மகட்கொடை வேண்டல்**

தலைவன் மகட்கொடை வேண்டியபொழுது உடன்படுவதரோ? மாட்டாரோ? என ஐயுற்றுக் கவலையுடன் தலைவி தன் இல்லத்தில் இருக்கும்போது அவளது கவலையைப் போக்கும் சூழலை ஏற்படுத்துபவளாகத் தோழியின் செயல் அமைந்துள்ளது. இதற்குச் சான்றாக.

"ஒண் தழை அயரும் துறைவன்

தண் தழை விலை' என – நல்கினன் நாடே" (ஐங் 147)

எனப் பாடல் அமைந்துள்ளது. தலைவியைப் பெற வேண்டி தலைவியின் இல்லத்தார்க்குப் பரிசாக நாட்டை நல்கினான் என்பதால், அன்றைய சமூகத்தில் மணமுடிக்க வேண்டி ஆடவர் பெண் வீட்டாருக்குப் பொருள் வழங்கும் நிலை காணப்பட்டுள்ளது. இப்பாடலில் சமூக இயக்கம் விளக்கப்பட்டுள்ளது. களவானது முடிவுற்ற கற்பு என்ற அடுத்த படிநிலைக்கு வாயிலை ஏற்படுத்தும் திருமணப்பேச்சு, பாடலின் மைய இயக்கமாக அமைகின்றது.

**இனிது முயங்குமதி**

திருமணம் என்பது சமூக இயக்கமாகச் சுட்டப்படுகின்றது. களவொழுக்கம் உச்சத்தை அடையும் நிலை திருமணமாகும், அவ்வாறு திருமணத்திற்கு வழிகோலும் (ஊன்றுபோல்) ஆகத் தோழி செயல்படுகிறாள்.

"வீ இனிது கமழும் துறைவனை

நீ இனிது முயங்குமதி, காதலோயே" (ஐங்.148)

ஊரறியச் சான்றோர் முன்னிலையில் திருமணச்சடங்கு நிகழ்ந்தபின் தோழி இனி அச்சம் விடுத்து நின் கணவனைத் தழுவி இன்புறுவாயாக என வாழ்த்துகின்றாள். களவு நிறைவடைந்து கற்பு வாழ்க்கைக்கு வழிப்படுத்தும் இச்செயல் தோழியின் கடமையாக அமைகின்றது. கற்பின் அடுத்தகட்ட வளர்ச்சிக்கு இட்டுச் செல்கின்றது.

**ஒரு வழித்தணத்தல்**

களவில் பிரிவு ஒருவழித்தணத்தலால் ஏற்படும். அவ்வாறு நிகழும்போது அச்சிறு பிரிவைக்கூட ஏற்காத இயல்பினளாகத் தலைவி காணப்படுவாள். அவளைத் தேற்றும் மாண்பினளாகத் தோழி செயல்படுவது, அவளது இருப்பை நிலைநிறுத்துகின்றது.

இதனை,

"வான் உயர் நெடு மணல் ஏறி ஆனாது

காண்கம் வம்மோ – மோழி!

செறிவளை நெகிழ்த்தோள் எறி கடல் நாடே!" (ஐங்.199)

தொய்வுறும் தலைவியை அந்திலையிலிருந்து மீட்டுக்கொணரும் பாங்கி தலைவனின் நாட்டின் பொருமை கூறி, திரைகள் வந்து தழுவி நீங்கும் வானாளாவிய நெடிய மணல் மேட்டின் மீது ஏறி நின்று இடைவிடாது கண்டு மகிழ்வோம். தலைவன் விரைவில் வந்து விடுவான். அலைபோல உன்னைத் தழுவுதற்கு என்று ஆறுதல் மொழி கூறுபவளாய் தோழி செயல்படுகிறாள். தலைவியின் இன்பதுன்ப செயல்பாடுகளில் தோழியின் நிலைப்பாடே முக்கிய அங்கமாகத் திகழ்கின்றது. வரைவிற்கான சூழலை ஒருவழித்தணத்தல் ஏற்படுத்துகின்றது. ஒருவழித்தணத்தலின் போது தலைவியின் உடல் மற்றும் உள்ளத்தால் ஏற்படும் மாற்றங்கள், வரைவிற்குத் தூண்டுகோலாய் அமைகின்றன. இந்நிலையில் தலைவியைத் தேற்றி களவின் அடுத்த நிகழ்விற்கு இட்டு செல்பவளாகத் தோழி விளங்குகின்றளர்.

தலைவனது ஒழுக்கத்தை இடித்துரைப்பவளாகவும் அவனது நற்பண்பைப் போற்றுபவளாகவும் தோழி திகழ்ந்துள்ளாள். தலைவியின் ஐயத்தைப் போக்கி இல்லறம் சிறக்க உற்றதுணையாகத் தோழியின் நிலைப்பாடு இலக்கியத்துள் பயின்று வந்துள்ளது.

"புள்ளிக் களவன் ஆம்பல் அறுக்கும்

தண்துறை ஊரன் தெளிப்பவும்

உண்கள் பசப்பது ஏவன் கொல்?" (ஐங்.21)

புறத்தொழுக்கம் இனி எனக்கு இல்லை எனத் தலைவன் தனது உறுதிபாட்டைச் சாற்றும்போதும் தலைவி இல்லை (அஃது உளது) என வேறுபடும்போதும் இல்லறம் சங்கடத்திற்கு உள்ளாகின்ற நிலையில், தோழி சாந்து செய்விக்கக் கடமைப்பட்டவளாய் விளங்குகிறாள். இனி என்பால் பரத்தையர் ஒழுக்கம் உளதாகாது என உறுதி கூறிய பின்னும் உன்னுடைய மையுண்ட கண்கள் என்ன? எனத் தலைவியின் ஊடலைத் தவிர்த்து இருவரையும் ஒருமுகப்படுத்தும் சமூக கருவியாகத் தோழி சமூக இயக்கத்திற்கு வழி செய்கின்றாள்

**ஆற்றாமை**

தன் இயலாமையை விளக்கும் மரபும் தோழியிடம் உண்டு. தனிமனித ஒழுக்கத்தில் பிழை ஏற்படும்போது, அதனை நயம்பட உரைத்துத் திருத்தும் போதும், தன் ஆற்றாமையைப் புலப்படுத்தும் நிகழ்வும் உண்டு.

"நினக்கு மருந்து ஆகிய யான். இனி

இவட்கு மருந்து அன்மை நோம் என்நெஞ்சே"

கற்பில் புறத்தொழுக்கம் மேற்கொண்டொழுகும் தலைவனிடத்தல் களவில் தலைவியைக் காண தலைவன் உற்ற காதல் நோய்க்கு மருந்தாகிய தோழி, கற்பில்

தலைவிபடும் துன்பத்திற்குத் தன்னால் ஒன்றும் செய்ய முடியவில்லையே என நொந்து கூறுகின்றாள். ஆகவே தலைவிக்காக உன்னைத் திருத்திக் கொள்ளாவிடினும் எனக்காக உன்னைத் திருத்திக் கொள்ளமுடியாதோ செய் நன்றி காத்தருள் என்று கூறாமல் செயல்பாடு கூறுகின்றாள். இப்பாடலில் தோழியின் உரிமை சார்ந்ததாய் அமைந்துள்ளது. தோழியின் இயக்கம் தலைவன் தலைவி வாழ்வில் வானத்து நீலம் போலப் பிரிக்க இயலாத அங்கமாகின்றது.

வேந்து தொழில் பிரிவு

வேந்து விளையின் காரணமாகத் தலைவன் தலைவியைப் பிரிவது இயல்பாகும். இக்காலகட்டங்களில் பிரிவாற்றாது தலைவி வருத்தமுறும்போது தலைவனின் வரவுணர்த்தி ஆறுதல் வழங்கும் பண்பினளாகத் தோழியின் இயக்கம் அமைகின்றது.

"........................................................... எனையதூஉம்

நிற் றுறந்து அமைகுவர் அல்லர்

வெற்றி வேந்தன் பாசறையோரே" (ஐங்.461)

தலைவன் குறித்தபருவம் வந்தும் வராமையால் வருந்தும் தலைவிக்கு 'வினையே ஆடவர்க்கு உயிர் எனினும் வெற்றியை உடைய வேந்தனின் பாசறையில் இருக்கும் தலைவன் உன்னை நினையாது பிரிந்து வாழும் தகைமையாளன் அல்லன் விரைந்து வருவான் என்று தலைவியின் உள்ளத்து உணர்வை தன் உணர்வாக்கி தாயாகச் செயல்படுகின்றாள். தலைவன் தலைவியின் இல்வாழ்வை மகிழ்ச்சியுடையதாக்கும் என்பதை உறுதிபடுத்தும் செயல்பாடாகும்.

**தலைவி**

இலக்கியத்தின் முக்கிய கதாப்பாத்திரமாகச் சித்திரிக்கப்படும் தலைவி தனது வாழ்வைத் களவில் தொடங்கிப் பல படிநிலைகளைக் கடந்து கற்பில்சார் பயணப்படுகின்றாள். அப்படிப்பட்டவள் பல சூழல்சார் இயக்கத்தைத் தன்னகத்தே கொண்டியிங்கும் பாங்கு போற்றற்குரியது.

**இற்செறிப்பு அறிவுறுத்தல்**

களவில் தலைவனோடு கூடிய தலைவியின் காதல், ஊராரால் அலர் மொழியப்பட்டது. பெற்றோர் அறிந்தாரெனில் இற்செறிப்பு ஏற்படும். இதனால் தலைவன் தன்னை விரைவில் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்கிறாள்.

"பிரிந்தும் வாழ்ந்துமோ நாமே

அருந்தவம் முயறல் ஆற்றாதேமே?" (ஐங்.111)

தலைவனோடு கொண்ட நட்பினை, இழப்பதற்கு காரணம் முற்பிறவியில் நற்தவத்தை செய்யாததன் காரணமாக இப்பிறவியில் பிரிந்து வாழ இயலுமோ? என்ற எதிர்மறைக்கூற்று பாடலை வலுப்படுத்தி நகர்த்துவதோடு அல்லது அவளது மணஉணர்வு இயக்கச்சூழல் உள்ளத்து உணர்ச்சியை மேலோங்கச் செய்துள்ளது. மேலும் வரைதல் வேண்டி முடுக்கும் அடுத்தபடிநிலையை நினைவுறுத்தும்வகையில் இயங்கியுள்ளது.

**நோய்படு நெஞ்சம்**

ஒருவழித்தணத்தலின் காரணமாக தலைவன் தன்னூர் செல்லும்போது தலைவி அத்தகு சிறு பிரிவினைக்கூட ஆற்றாளாய் விளங்குகிறாள் என்பதனை ஐங்குறுநூறு (161),(162) ஆம் பாடலின் வாயிலாக பெறப்படுகின்றது.

"பெருங்க கடற்கரையானது சிறு பெண் காக்கை
பயந்து நுதல் அழியச் சாஅய
நயந்த நெஞ்சம் நோய்ப் பால; தே"
"துறைவன் சொல்லோ பிறவாயின"

முதலாம் பாடலில் தலைவன் பால் மிகுந்த அன்புகொண்ட நெஞ்சம், சிறுபிரிவையும் தாங்காது பசலைகொண்டு இளைத்து நோயுற்றது என்பது போலத் தலைவியின் வார்த்தைகளால் இயக்கம் பெற்றுள்ளது. மேலும் 'பெருங்கடற்கரையது சிறு வெண்காக்கை' என்பது முரண் தொடையாகும்.

தான் அவன்மீது கொண்ட காதலுக்குத் தண்டனையாகத் தன் நெஞ்சம் இப்பொழுது தண்டனையுறுகிறது எனத் தன் பிழையைத் தன் நெஞ்சின் மேல் ஏற்றிக் கூறுகின்றாள்.

**கற்பு வாழ்வு**

உடன்போக்கில் சென்று தன்னூர் திரும்பி வந்த தலைவி, தன் வருத்தத்தைக் கண்டு பிறர் வருந்தும் தன்மையை ஏற்றுக்கொள்ளாத நிலையிலும், தன் கணவன்பால் தான் கொண்ட பேரன்பைத் தெளிவாகத் தன் சொல்லாடலால் வெளிப்படுத்தியுள்ளாள்.

"வேய் வனப்பு இழந்த தோளும், வெயில் தெற
ஆய்கவின் தொலைந்த நுதலும், நோக்கிப்
பரியல் வாழி, தோழி பரியின்
எல்லை இல் துடும்பை தரூஉம்
நல் வரை நாடனொடு வந்தமாறே" (ஐங்.392)

கோடை வெயில் தாக்கத்தால் தன் உடல் அழகு இழந்தமையைப் பொருட்படுத்தாதீர்கள். மற்றவர்களது வருத்தம் தலைவனைப் பாதிக்கும் என்பதாலும் 'எல்லையில் இடும்பை தரூஉம்' என்று கூறியும் தன் காதலன் நல்வரை நாடன் என்று அவன்பால் கொண்ட பேரண்பினை வெளிப்படுத்தியுள்ளாள். இத்தகைய பண்பு பெண்கள் எச்சூழலிலும் தன் கணவன் துன்பப்பட்டு விடக்கூடாது என்பதனையும் தான் அவன்மீது கொண்ட நம்பிக்கையையும் வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. தன் குடும்பம் என்ற சமூகக் கட்டமைப்பிற்காகத் தன் நலன் பேணாது பிறர் நலம் பேணும் சமூக இயக்கத்தை விளக்கும் வகையில் தலைவி செயல்பட்டுள்ளமை பெண்மையை மெய்ப்பிக்கின்றது.

**சூள் பொய்த்தமை**

நல்லன கூறி மணந்த தலைவன் களவில் தலைவியது நலம் பாராட்டிப்பல உறுதி மொழிளைத் கூறி மணந்துகொண்டு இப்பொழுதும் அந்நலன் தன்னிடத்தே இருந்தும் தலைவன் புறக்கணித்தவனாய் பத்தமை மேற்கொண்டெழுகின்றான். இது தகாது என்று கூறுவதாய் தலைவியின் பேச்சு அமைந்துள்ளது.

“நல்ல சொல்லி மணந்து இனி

நீயேன் என்றது எவன்கொல்?– அன்னாய்! (ஐங்.22)

‘இனி நின்னை என்றும் பிரியேன்’ என்று உறுதிக் கூறியவன் இன்று அம்மொழி மறந்து பிரிதற்குக் காரணம் அறியாது எவன்கொல்? என்று வினவுகின்றாள். இப்பாடலில் பிரியேன் என்ற சொல்லாடல் மகிழ்ச்சித் தருணத்தில் கூறுவதற்குக் காரணம் என்றேனும் பிரியும் சூழல் வரலாம் என்பதை உறுதிப்படுத்துவதாய் அமைந்து பாடல் நகர்ந்து செல்கிறது. பெண்ணின் இயக்கம் ஆணை மையப்படுத்தியே சங்கப்பாடல்களில் மிகுதியாக அமைந்துள்ளன. ஆண்தான் கொடுத்த வாக்கை மீறுபவனாகப் பல இடங்களில் சித்திரிக்கப்பட்டுள்ளமை அன்றைய ஆணாதிக்கச் சமூக இயக்கத்தைப் பதிவு செய்கின்றது.

**பரத்தமை**

பரத்தமை அக்காலச் சமூகத்தில் புறக்கணிக்கப்படாத ஒழுக்கமாக இருந்த நிலையில் தலைவிக்கு நிகராகப் பரத்தை தன்னை நினைத்துக்கொண்டு பேசுகிறாள் என்பதைச் ‘சாடுவாகத் செயல்படுகிறாள் தலைவி’.

“மடவள் அம்ம, நீ இனிக் கொண்டோளே

தன்னொடு நிகரா என்னொடு நிகரிப்

பெருநலம் தருக்கும்” (ஐங்.67)

பரத்தையைப் பிரிந்து வந்தமைக்குத் தலைவி தான் காரணம் என்று பரத்தை நினைத்துக்கொண்டு பேசுகிறாள் என்பதனை, தலைவன் பரத்தையரைக் கைவிட்டவன் என்ற உண்மை உணராது புறனுரைக்கிறாள் என்பதால் அவள மடவோள் எனக்கூறியும் குலமகளான தனக்கு நிகராகப் பரத்தை தன்னை நினைத்துக்கொண்டு புலம்பும் நிலையைச் சுட்டிக்காட்டுகின்றாள்.

**குழவியைப் பெறல்**

புதல்வகை, ஈனும் மிக உயர்வான நிலை உயர்குலத்தைச் சார்ந்த குலவதுவிற்கு மட்டுமே உண்டு. இச்சமூக மரபு எவ்வகையிலும் தளர்ச்சியை ஏற்படுத்திக் கொள்ளவில்லை.

“உடலினென் அல்லேன் ;பொய்யாது உரைமோ

யார் அவள், மகிழ்ந தானே– தேரொடு

தளர் நடைப் புதல்வனை உள்ளி, நின்

வளமான வருதலும், வெளவியோளே?” (ஐங்.66)

எனத் தலைவியின் மனவேதனை, சினம் பாடலாய் உருப்பெற்றுள்ளன. தன் புதல்வனோடு கொஞ்சி விளையாடும் காலத்திலும் பரத்தையோடு இன்புற்றிருந்தனை இங்கு வருவதைத் தடுத்தவள் அப்பரத்தையா? அவள் எவ்வகையில் உனக்கு உறவுடவள்?என்று கேட்டும் மேலும் உன்பால் சினம் கொள்ள நான் யார்? என்று கூறியவள் என்னைக் கூடுவதற்குத் தடைவித்த பரத்தை புதல்வனைக் காணவும் தடை செய்தாளோ? எனப் பரத்தையின் கொடுமையைக் கூறுவதாய் தலைவி செயல்படுகிறாள். பொதுவாகப் பரத்தமை மேற்கொண்டொழுகும் ஆடவர் பொய் கூறுவது வழக்கமாகும். அதற்கும் சாடுகின்றாளாய், பொய்யாவே உரைமோ என்ற சொல்லாடலைப் பயன்படுத்துகின்றாள். தலைவன் வாராமைக்குத் தன்மீது அன்பில்லை என்பதும் வரவிற்குத் தன் புதல்வன் மீது அன்புடைமையும் கூறித் தனக்கு என்ன மிச்சம் புதல்வனின் தாய் என்ற நிலை மட்டுமே என்று பெண்ணின் மனத்தின் ஒட்டுமொத்த மனவோட்டத்தையும் வெளிக்கொணரும் பான்மையளாய் தன்நிலை உணர்த்தியுள்ளாள். இப்பாடல் சமூக இயக்கத்திலும் ஆணின் இழிவான செயல்களைத் தெளிவாகப் புலப்படுத்துகிறது. தலைவியின் இயக்கம் பெரும்பாலும் கற்பிலேயே மிகுதியாக வலுப்பெற்றுள்ளது. பெண்ணினத்தின் நிலை அவர்களது உளளக்குமுறல், கொண்டான்பால் கொண்ட அன்பு, சமூகத்திற்காகத் தன்னை அழித்துக்கொண்டு வாழும் வாழ்க்கை இயக்கம் சமூகத்தில் பெரும் மதிப்பை ஏற்படுத்துகின்றது.

**செவிலி உடன்போக்கு**

தலைவியின் வளர்ப்புத்தாய் செவிலியாவாள். இவள் தன் மகளைக் காட்டிலும் பெரிதும் தலைவியிடம் அன்பு கொண்டொழுகும் பண்பினளாவாள். தன்னால் வளர்க்கப்பட்டவள் உடன்போக்கில் காளையொருவனோடு சென்றுவிட்ட போது,

“பல் ஊழ் நினைப்பினும், நல்லென்று ஊழ

................................ காளை காப்ப

முடி அகம் புகாஅக் கடந்தலள்

கடுவனும் அறியாக் காடு இறந்தோளே“ (ஐங்.374)

செவிழி அவளது பிரிவை எண்ணி வருந்தியபோதும் அவள் கணவனோடு சென்றது அறத்தின் வழிப்பட்ட செயல் என்று கூறுகிறாள். தலைவியின் கற்பு நெறி தவறாமல் இருக்க உடன்போக்கினை மேற்கொண்டாள் என்பதைச் செவிழி நியாயப்படுத்துகின்றாள்.

பிரிவு என்பது அனைவரையும் வாட்டும் செயல்பாடாகும். அவ்வாறு பிரிந்தாரை எண்ணி ஏக்கப்படுவதும் அவர்கள் பயன்படுத்திய பொருட்களைக் காணும்போதெல்லாம் அவரை நினைவுபடுத்தும் நிலையும் கையற்றுச் செய்வதறியாது புலம்பும் நிலையும் இயற்கையே.

“இது என்  பாவைக்கு இனிய நன் பாவை

இது என் பைங்கிளி எடுத்த பைங்கிளி

இது என் பூவைக்கு இனிய சொல் பூவை” என்று” (ஐங்.375)

தலைவியின் செயல் செவிலியைக் கையற்றுப் புலம்பும் நிலைக்கு ஆட்படுத்தியது. இது அவள் விளையாடிய பாவை, அவள் கையிலெடுத்துக் கொஞ்சிய பைங்கிளி என் பூவை மொழியாள் மகிழ இனிய சொற்களைப் பேசிய பூவை இன்று தன் காதலன் துணையுடன் சென்றனளோ? என்று தலைவியின் நினைவை மீட்டுருவாக்கம் செய்துகொண்டு கையற்றுச் செயல்படுகிறாள் செவிலி. உடன்போக்கு தனிமனித இயக்கமாக எண்ணியபோதிலும் முற்றிலும் கற்பு நெறிக்கு உட்பட்ட சூழலுக்கு ஏற்றி நோக்கும்வகையில் சமூக இயக்கமாகத் திகழ்கன்றது. அன்றைய சூழலிருந்து இன்றைக்கும் இச்சமூக இயக்கம் மரபு வழிப்பட்டதாத் தொடர்ந்து வருகிறது.

**நற்றாய்**

தலைவியைப் பெற்றவளே நற்றாய் அவளை வளர்த்த பெருமை செவிலியைச் சாரும். உடன்போக்கில் தன்னுடைய மகள் சென்றுவிட்டபோது அதிகத் துயர் அடைபவளாய் செவிலி இருக்கும் போது, அவளைத் தேற்றியும் தன் துக்கத்தையும் பதிவு செய்பவள் நற்றாய்.

"தெறுவது அம்ம நும் மகள் விருப்பே
உறு துயர் அவலமொடு உயிர் செலச்சாஅய்
பாழ்படு நெஞ்சம் படர் அடக் கலங்கிய
நாடு இடை விலக்கிய வைப்பின்
காடு இறந்தனள், நம் காதலோலே!" (ஐங்.313)

இப்பாடலில் தன் மகளை நும் மகள் என்று செவிலியின் மகளாக உரிமைப்படுத்தி அவள்மீது கொண்ட இத்துன்பத்திற்குக் காரணம் என்று கூறியும் காதலே அவளை நம்மிடமிருந்து பிரித்தது காரணம் தலைவன்மீது கொண்ட பற்றே(காதலே) என்று வெறுப்படைகின்றாள் நற்றாய். பெண்ணாகப்பட்டவள் பெரும்பாலான இடங்களில் செய்வதறியாது புலம்பும் சமூக இயக்கத்திற்குள் சூழல் வயப்பட்டனவளாக இயங்கும் நிலையை நற்றாயின் இயக்கம் புலப்படுத்துகின்றது.

**அழுங்கல் மூதூர்**

தலைவனை வஞ்சினம் உரைப்பவளாய் நற்றாய் செயல்பட்டுள்ளாள். தலைவியின் உள்ளம் ஏற்கும்படியான பொய்யான வாக்குறுதிகளைக் கூறி தலைவன் அவளை அழைத்துச் சென்று விட்டான் என்ற சிந்தனையுடையவளாயும் ஊரலரைப் பொருட்படுத்தாது சென்ற தன் மகள் தன்னையும் நினைத்தலின் என்று வருந்தி புலம்புகின்றாள். சமூகத்தில் உடன்போக்கு பரவலாகக் காணப்பட்டாலும் அச்செயல் பழியாகப் பேசப்படுவதும் அக இயக்கமாக இருந்த போதிலும் சமூக இயக்கத்திற்கு உட்பட்டதாகபடுகிறது. அந்நிலை தவிர்க்க இயலாத ஒன்றாக அமைந்து விடுகிறது.

"நெஞ்சு உணத் தேற்றிய வஞ்சினக் காளையொடு
அழுங்கல் மூவர் அலர் எழ
செழும் பல் குன்றம் இறந்த என்மகளே?" (ஐங்.372)

**வதுவை**

தலைவனின் இல்லத்தில் தலைவிக்குச் சிலம்பு கழி நோம்பு செய்யப்பட்டதைக் கேட்ட நற்றாய் 'வதுவை என் இல்லில் செய்க', என்று சமூக இயக்கமுடையளாக செயல்பட்டுள்ளாள் நற்றாய்.

"நும் மனைச் சிலம்பு கழீஇ அயரினும்
எம் மனை வதுவை நல் மணம் கழிக" (ஐங்.399)

திருமணத்திற்கு முன் சிலம்பு கழி நோம்பு தலைவியின் இல்லத்திலே செய்யப்படுதல் வழக்கமாகும். உடன்போக்கின் காரணமாகத் தலைவன் இல்லத்தில் செய்தமையால் திருமணம் தலைவியின் மனையில் நடைபெறவேண்டும் என்பதை எடுத்துரைப்பாளாய் நற்றாய் செயல்பட்டுள்ளாள். திருமணம் என்ற நிகழ்வு சமூக இயக்கமாக கொள்ளப்படுகின்றது. இதன் பின் கற்பு வாழ்வை மேற்கொண்டு நகர்த்திச் செல்ல வழித்தடமாகும்.

**காதற் பரத்தை**

காதற்பரத்தை பரத்தை மகளாக பிறப்பினும் ஒருவனுக்கே உரிமை பூண்டு வாழ்பவளாவாள், சமூகச் சூழலில் காதல் பரத்தையும் ஓர் இடத்தைப் பெறுகிறாள்.

"................................ மகிழ்நன்
நயந்தோர் உண்கண் பயந்து, பணிமல்க
வல்லன் வல்லன் பொய்த்தல்
தேற்றான் கூற்ற சூள் வாய்த்தல்லே." (ஐங்.37)

காதற்பரத்தை தன் உணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளாள். தலைவன் தன்னை விரும்பும் பெண்டிரை ஆறாத் துயருக்கு உட்படுத்திக் கண்களில் நீர் சொரியச் செய்யும் இயல்பினன். அவன் கூறும் மொழிகள் யாவும் பொய் என்பதனை வெளிப்படுத்துவதாய் இப்பாடல் அமைந்துள்ளது. சமூகத்தில் ஆணின் இயக்கம் இவ்வாறே அமைந்துள்ளது. அவன் தன் இயக்கத்தை ஏற்றொழுகக் கடமைப்பட்டவர்களாகப் பெண்கள் வடிவமைக்கப்பட்டுள்ளனர் என்பது பெண்ணின் குமுறலாக வெளிப்பட்டுள்ளது.

**புதல்வன் கனிமொழி**

என்னதான் தலைவனின் ஆசை நாயகியாகப் பரத்தைத்திகழ்ந்த போதிலும் புதல்வனை ஈனும் உரிமை அவளுக்கில்லை. அந்தப் பாக்கியத்தைப் பெற்றவள் தலைவி மட்டுமே.

"எம் இவண் நல்குதல் அரிது
நும் மனை மடந்தையொடு தலைப்பெய்தீமே" (ஐங்.86)

புதல்வனின் அன்பு மொழியைக் கேட்டு இன்புறும் தலைவன், இனிப் பரத்தையோடு இருத்தல் அரிது என்பதை உணர்ந்த பரத்தை உன் இல்லத்திற்கு சென்று தலைவியோடு, வாழ்வாயாக எனக்கு அத்தகு பாக்கியம் இல்லை என்பதை வருத்தத்தோடு கூறுவதாய் பாடலை நகர்த்தியுள்ளாள். சமூகச் சூழலில் பரத்தை சென்ற

இடம் ஒரு விதிக்குட்பட்டே செயல்பட்டுள்ளது. தனிமனித இயக்கம் சமூக இயக்கத்தின் விதிக்குட்பட்டதே என்பது உய்த்துணரப்படுகின்றது.

பெண் சார் இயக்கம் வாழ்வியலின் நான்கில் மூன்று பங்கு இடத்தைப் பெறுகின்றது. ஆயினும் இவர்கள் ஆணைச் சுற்றியே தங்களது இயக்கத்தை நிகழ்த்தியுள்ளனர். காதலில் துவங்கிக் கற்பு வரை வழிப்படுத்துவதாகவும் இடித்துரைக்கும் நிலையும் இருவரையும் ஒன்றாக இணைக்கும் செயல்பாடுகளில் தோழியின் இயக்கம் அமைந்துள்ளது. தலைவி தன் குடும்பம், கணவன், புதல்வன், என்ற சூழலில் தனது அன்பு, ஆற்றாமை, கோபம் போன்றவற்றைச் சிறப்பாக வெளிப்படுத்தி செயல்பட்டுள்ளாள். செவிலியும் நற்றாயும் தாயார் என்ற நிலையில் மகளின் வாழ்க்கைச் சூழலில் ஏற்படும் இன்பதுன்பங்களில் வருத்தமும் மகிழ்ச்சியும் அடையும் பண்பினர்களாக இயக்கப்பட்டுள்ளனர். காதல் பரத்தையும் தங்களது வாழ்க்கை ஆணைச் சார்ந்தே அமைந்துள்ளது என்பதை மெய்ப்பிப்பதாகவும் சமூக இயக்கத்தை அனுசரித்தும் தங்களது நிலை உணர்த்தும்விதமாகவும் தங்களது கர்வம் மற்றும் கோபத்தை நிலை நிறுத்துபவர்களாகவும் செயல்பட்டுள்ளனர். ஒவ்வொருவரது தனிமனித இயக்கமும் சமூக இயக்கத்திற்கு உறுதுணையாக அமைந்துள்ளன.